Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## வரி அட்டை இன்றிச் செல்லும் ஊர்திகள் மீது சட்ட நடவடிக்கை

வீதிகளில் பாவிக்கப்படும் மோட்டார் ஊர்திகளில் பல தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவு செய்து வழங்கப்பட்ட வரி அட்டை இன்றி வீதிகளில் பாவிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே 1993-ம் ஆண்டிற்கான வரி அட்டை இன்றி ஊர்திகளை வீதிகளில் பாவிப்போர் மீது தொடர்ந்தும் தமிழீழ காவல்துறையினரும் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர் என மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 29 13-07-94 புதன்கிழமை ஓசை 145

யாழ்ப்பாணம் நல்லூர்

## சிறிலங்கா பாராளுமன்ற தேர்தல் களம்

# கட்சி ஆதரவாளர்கள் இடையே மோதல்; அமைச்சர் உட்பட 200 பேர் காயம்

## சில வாகனங்களும் தீக்கிரை

[கொழும்பு]

சிறிலங்காவில் பொதுத் தேர்தலுக்கு கட்சிகள் விண்ணப்ப பத்திரங்களைத் தாக்கல் செய்து இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற வன்முறையில் சுமார் 200 பேர் வரையில் காயமடைந்தனர். இவ் வன்முறையில் அமைச்சர்கள், வேட்பாளர்கள், கட்சித் தொண்டர்கள் என இரு பிரதான கட்சிகளைச் சேர்ந்தவர்களும் காயமடைந்தனர். அத்தோடு சில தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன.

இவ் வன்முறையில் பாதிக்கப்பட்டவரில் அநேகர் சிறிலங்காவிலுள்ள பல மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது இவ்வாறு காயப்பட்டவர்களில் அமைச்சர்களும் அடங்குகின்றனர்.

### இரத்தினபுரியில்

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்த பின் வெளியேறிய பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான யூ.ஜே.எச். ... கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களால் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

இது பற்றி யூ. ஜே. எச் செனவிரத்னா தன்னை நோக்கி தாக்க வந்த கும்பல் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட தனது பாதுகாப்பு உத்தியோகத்தர், பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கலந்துரையாடல்

பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல பாடசாலை அதிபர்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பதிவு செய்து கொள்ளவும்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்து காண்ஒளி சாதனங்கள் (டி. வி, வீடியோ டெக்) மற்றும் மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கு சேவையில் விடுபவர்கள் தமது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் புலிகள் ராணுவம் மீது தாக்குதல்

### பல படையினர் பலி;

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல் ஒன்றை நடாத்தியதாகத் தெரியவருகின்றது.

நேற்று அதிகாலை நடைபெற்ற இந்த தாக்குதலின் போது சிறிலங்கா இராணுவத்தினர் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக நேற்று நள்ளிரவு எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவ நிலைகளின் மீது விடுதலைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தேர்ச்சிக் கணிப்பீடு

ஆண்டு 9 இற்கான தன்னறிவுத் தேர்ச்சிக் கணிப்பு படிநிலை - 5 எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளியன்று பிற்பகல் 2-00 மணிக்கு வலயம் 2ஐச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது. செய்கைத் தாள்களினை அவ்வக் கோட்டங்களில் வெள்ளி காலையில் பெற்றுக் கொள்ளவும். மேற்படி செய்கைத் தாள் 11, 12, 14 படிமுறைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

## 7 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவில் 3 கோடி ரூபா தரகுப் பணம்?

### ஆயுதமும் பாவனைக்கு உதவாதது

(கொழும்பு)

ஏழு கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு... டன் தொடர்பு கொண்டு இவ் வாயுதங்களை பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்... இந்த ஆயுதக் கொள்வனவுடன் தொடர்பற்ற இராணுவ அதிகாரி மேற்படி ஆயுத நிறு...

## ஐ.தே.கவுடன் பிரேமா குடும்பம் தொடர்பு எதுவும்கொள்ளக்கூடாது

### பிரேமாவின் மகள் துலாஞ்சலி வற்புறுத்து

ஆளும் ஐ. தே. கவுடன் தமது குடும்பத்தினர் எத்த... முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகள் திருமதி ... திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி உடனடியாக வீட்டுக்...

(கொழும்பு)

ஏழு கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத உபகரணங்கள் தற்போது பாவனைக்கு உதவாதவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்ட சில புள்ளிகள் இவ்வாயுதக் கொள்வனவு தொடர்பாக நேரிடையாக ஆயுத விநியோகிப்பாளருடன் தொடர்பு கொண்டு இவ் வாயுதங்களை பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏழு கோடி 20 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட இவ்வாயுதங்கள் கொழும்பு வந்து சேர்ந்த போது அவை பாவனைக்குதவாதவை என அவற்றை ஆராய்ந்த நிபுணர்கள் குறிப்பிட்டனர். இதையறிந்த இந்த ஆயுதக் கொள்வனவுடன் தொடர்பற்ற இராணுவ அதிகாரி மேற்படி ஆயுத நிறுவனத்தின் உள்ளூர் முகவருடன் தொடர்பு கொண்ட போது தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என அம் முகவர் கைவிரித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பின்னர் இராஜதந்திரநடவடிக்கைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அச்சுறுத்தல் மணலாற்றுப் பகுதியில் அதிகம்

## பெயர் குறிப்பிட விரும்பாத ராணுவ அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)

மணலாறு பகுதியில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் அதிகமாகவே உள்ளதாக இப் பகுதியில் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஓர் இராணுவ அதிகாரி கூறியதாக 'சண்டேலீடர்' பத்திரிகையில் இக்பால் அதாஸ் எழுதிய செய்திக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இவ் அதிகாரி தனது பெயரை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டதாகவும் அவர் அதில் எழுதியுள்ளார்.

7500க்கு மேற்பட்ட படையினர் மணலாறு பகுதியில் உள்ளனர். மணலாற்றின் மேற்குப் புறமாக நெடுங்கேணி உள்ளது. தெற்கில் யான்ஓயா வரையில் அடர்ந்த கானகம் உள்ளது. இதைத் தவிர கிழக்குப்புறமாகஉள்ள கடலில் இருந்து கடற்புலிகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக அவ் அதிகாரியை மேற்கோள் காட்டி இக்பால் அதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள்ளும் புலிகள் நுழைந்து பொறிவெடிகளை வைக்கின்றனர். தாக்குதல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கடலில் மூழ்கிய கந்துல உட்பட 3 கடற்படைக் கப்பல்கள் விற்பனை

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான கந்துல, சமுத்திராதேவி மற்றும் பி 231 என்னும் கப்பல்கள விற்பனை செய்யப்பட இருப்பதாகபாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கந்துல என்னும் கடற்படைக் கப்பல் கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணம் செய்துகொண்டிருந்த போது மர்மமான முறையில் நீரில் மூழ்கியதும், பின்னர் அது மீட்கப்பட்டு கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

அக்டோபர் 9, 1992இல் மூழ்கிய கந்துல என்னும் கப்பல், 1985 ஆம் ஆண்டில் சிங்கப்பூரிலிருந்து 58 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டது அத்தகையதொரு கப்பல் இப்போது வாங்கப்படுவதாயின் ரூபா 150 மில்லியனுக்கும் அதிக

(6ஆம் பக்கம் பார்க்க)

## செப்டம்பர் 1க்குப் பின் பாடசாலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அனைத்துப் பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காக செப்டம்பர் 1 இல் க.பொ.த. (உ/த) பரீட்சை முடிந்த பின்பே ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பதினொரு பாடசாலைகள் க.பொ.த. (உ/த) விடைத்தாள் திருத்தும் மையங்களாக உள்ளன. விடைத்தாள் திருத்தலும் இரு கட்டங்களாக நடைபெறும்.

முதற் கட்டம் பரீட்சை

(6ஆம் பக்கம் பார்க்க)

... வேட்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான யூ ஜே.எச். செனவிரத்னா மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது ஐக்

ஆளும் ஐ. தே. கவுடன் தமது குடும்பத்தினர் எத்தகைய தொடர்பையும் கொண்டிருக்கக் கூடாது என்பதில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகள் திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி மிக உறுதியாக இருப்பதாகத் தெரிய வருகின்றது.

கடந்த வாரத்தில் தமது தாயார் திருமதி ஹேமா பிரேமதாசாவும் சகோதரர் சஜீத் பிரேமதாசாவும் ஐ தே. க. சார்பில் போட்டியிட வந்ததாக கேள்விப்பட்டதையடுத்து கொழும்பு நவலோக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி உடனடியாக வீட்டுக்குப் புறப்பட்டார். ஐ தே. கவுடன் தமது குடும்பத்தினர் எவ்வித தொடர்பையும் கொண்டிருக்கக்கூடாதுஎன்று அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தினார். இதனாலேயே அம்பாந்தோட்ட மாவட்ட அமைப்பாளராகவும், ஐ,தே. க. நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டிருந்த சஜீத் தமது பதவி துறப்பை அறிவிக்க நேர்ந்தது

# ஹேமா புறக்கணிப்பு; பிரேமா குழுவிற்கு ஆத்திரம்

(கொழும்பு)

ஹேமா பிரேமதாசாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்காமையையிட்டு பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் ஆத்திரம் அடைந்து காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்நிலையில் கட்சிக்குள் எந்நேரமும் விரிசல் ஏற்படக்கூடிய நிலை தோன்றியுள்ளதாகவும் இவ் இரு அணிகளையும் கட்சிக்குள் ஒன்றாக வைத்திருப்பது இவ்இரு அணிகளுக்கிடையேயும் மோதலை ஏற்படுத்தும் வாய்ப்பை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தேர்தலின் போது பிரேமதாசாவின் கொள்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# ஹேமா நிராகரிக்கப்பட்டதன் பின்னணியில் நடந்தது என்ன?

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் ஐ-தே-க வேட்பாளர் மனு தாக்கல் செய்வது தொடர்பாக இறுதி நேரம்வரை இழுபறி நிலை ஏற்பட்டதாக கொழும்பு சிங்கள நாளேடு ஒன்று தெரிவித்துள்ளது-

இதன் காரணமாகவே வெளியன்று தாக்கல் செய்வதாக இருந்த இந் நியமன பத்திரம் அன்றைய தினம் தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாகவும் இதற்கு காரணம் ஜனாதிபதி டி-பி விஜேதுங்கா தனக்கு வேண்டியவர்களுக்கு வழங்க இருந்த இடங்களை இரத்துச் செய்ய வேண்டும் என கட்சியின் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தமையே என தெரியவருகிறது-திருமதி ஹேமாபிரேமதாசாவின் பெயர் பட்டியல் வர வேண்டும் என ஜனாதிபதி டி-பி விஜேதுங்கா தெரிவித்த போது இதனை எதிர்த்த -ரணில் விக்கிரம சிங்கா காமினி மற்றும் டி-பி விஜேதுங்கா ஆகியோருக்கு வேண்டியவர்களின் பெயர்களையும் பட்டியலில் இருந்து நீக்கினார்-

ரணில் தயாரித்த இந்த கொழும்பு மாவட்ட பெயர் பட்டியலை ஜனாதிபதி சென்ற ஆறாம் திகதி இரவு நிராகரித்தார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி புதிதாக ஒரு பட்டியலைத் தயாரிததார். இதில் மீண்டும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தொடர்பாக பிரதான கட்சிகள் தமது நிலையை தெளிவுபடுத்தவேண்டும்

## 'சண்டே ஐலண்ட்' வலியுறுத்து

பொதுத் தேர்தலில் போட்டியிடும் இரு பெரும் கட்சிகளும் நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பாக தத்தம் நிலைப்பாட்டை தெளிவாக மக்கள் முன்வைக்கவேண்டும் என்று 'சண்டே ஐலன்ட்' இதழ் ஆசிரிய தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடுகையில், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எந்த அளவுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படும்? வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்ந்தும் நீடிக்குமா? நாட்டின் ஏனைய பகுதிகளில் மாகாண சபை அமைப்புக்களின் நிலை என்ன? என்பவை தொடர்பாக தத்தம் நிலைப்பாட்டை மக்கள் முன் திட்டவட்டமாக முன் வைக்கவேண்டும்.

இவை தொடர்பாக பகிரங்கமான அரசியல் விவாதம் நடத்தப்படுவதே தேர்தல் பிரசாரமாக அமையும். பலவர்ண போஸ்டர்களில் வேட்பாளர்களை கவர்ந்திழுக்கும் புன்னகையுடன் காட்சி தருவது மட்டும் அரசியல் தேர்தல் பிரசாரமாகாது. இன்றைய பிரசாரக்களம் இதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### சீவாளி

சீவாளி (நாதஸ்வர நறுக்கு) விற்பனைக்குண்டு. கமலேஸ் வரி களஞ்சியம் 119|2, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 8783.

### தவறிவிட்டது

கொண்டலீட், உ-2417 கொண்டலீட்சைற்கவர் மூடி யாழ் நகர் பகுதிக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாத காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். நிதித்துறை கந்தசாமி-பாலன் (8791)

### தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடி ஒன்று கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் கருவேலடி லேனிற்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். க. சண்முகநாதன் கோயில் வீதி, நந்தாவில் அம்மன் கோயில் கொக்குவில் கிழக்கு. (சி-9907)

### பேச்சு, நாடக போட்டிகள்

(தொல்புரம்)

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சேக்கிழார் மன்ற ஆதரவில் சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மாணவர்களுக்கிடையே நடாத்தப்படும் பேச்சுப் போட்டிகளும் நாடகப்போட்டிகளும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் சங்கானைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (41)


## கோழிகளுக்கு தடுப்பூசி

கோழிகளுக்கு ஏற்படும் கொள்ளை நோயை தடுக்கும் முகமாக தடுப்பூசி போடும் திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கிராம ரீதியாக விஸ்தரித்து வருகின்றனர்.

இந்த வகையில் அண்மையில் வடமராட்சி நெல்லியடி வடக்கு கிராமம், புலவரோடைப் பகுதி, நரசிம்மர் கோவிலடி ஆகிய கிராமங்களில் அதிகளவாக கோழிகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.


## பனங்கட்டி(பனை வெல்லம்)

எம்மால் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தினை ஆடிப்பெருநாளை முன்னிட்டு கீழ்க்காணும் முகவரியிலமைந்துள்ள நிலையத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண பனை தென்னைவள அ. கூ. சங்கங்களின் சமாச சந்தைப்படுத்தல் பிரிவு

அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்கள் தேவையாயின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்;
பருத்தித்துறை பனை தென்னை வள அ. கூ. சங்கம்.
(8790) மந்திகை, புலோலி.



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### யாழ் கோட்டம்

## ★ முக்கிய அறிவித்தல் ★

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி முக்கிய கலந்துரையாடல் இன்று 13-07-94 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும் பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும், தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

செயலாளர்
(சி-9905) யாழ் கோட்டம்



## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

இல. 374 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு யாழ் மாவட்டத்தில் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொதுமுகாமையாளர் பதவி 101/9

தகைமைகள:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10-வது சம்பளத் திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது


## நினைவு கூருகின்றோம்...

### 13.07.1994....

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் தொண்டமானாறுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் லா-ரஞ்சன்** (கனகநாயகம் ஞானேந்திரமோகன் - பழைய உடையார் ஒழுங்கை, ஓடக்கரை - பருத்தித்துறை)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளி.

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**நிசாந்தன்** (கோணமலை கெங்காதரன் - ஆரையம்பதி - மட்டக்களப்பு)

**தேவா** (இராசசுந்தரம் சிறீகாந்தன் - 13, கலைப் புலவர் வீதி - யாழ்)

1986ஆம் ஆண்டு மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 50க்கு மேற்பட்ட தமிழர்கள்.

வவுனியா பாவற்குளம், 10-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்விவசாயி.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**லின்டன்** (சின்னையா நடராசா - விளாத்திக்குளம், இரணைஇலுப்பைக்குளம் - வவுனியா)

வடமராட்சிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட கரவெட்டி மேற்கு மணியர் வளவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து கொலை செய்யப்பட்ட மட்டு - ஆரையம்பதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு கொழும்பில் அமிர்தலிங்கம் முதலான தமிழினத் துரோகிகளுக்கான மரணதண்டனையை நிறைவேற்றியபோது சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் அறிவு** (கனகசபை சிவானந்தன் - ஒட்டங்குளம், துணுக்காய் - முல்லை)

**2-ம் லெப். பீற்றர்** ( — அலாசியஸ் - கிளிநொச்சி)

**மேஜர் விசு** (இராசையா அரவிந்தராம் - வதிரி, கரவெட்டி - யாழ்)

திருமலையில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளரான-

**சறோ அக்கா** (தாமோதரம்பிள்ளை சறோஜினிதேவி - கூனித்தீவு, மூதூர் - திருமலை)

பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் சிற்றூர்தி ஒன்றின் மீது இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு மதுராங்குளத்தில் எமது முகாமைச் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்டபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**அரசன்** ( — யோகநாதன் - பன்குளம் - திருமலை)

**கேதீஸ்** ( — — திருமலைநகர்)

கிளிநொச்சி - கொக்காவில் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது 3-ம் நாள் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் உஷா** (வனிதாம்பிகை இராசையா - 2-ம் வட்டாரம் - முல்லைத்தீவு)

**ஜெயா** (சங்கரப்பிள்ளை கணேசன் - கட்டையர் குளம் வவுனியா)

**2ம் லெப். சாலினி** (நவநீலவதனா அருமைச்சந்திரன் - புதியசந்தை - வல்வெட்டித்துறை)

அம்பாறை - சொறிக்கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு.


இதோ ஓர் அதிரடிச் செய்தி
ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா வழங்கும்

தோழமையுள்ள வெகுமதி
காவிச் செல்லும் உணவுப் பொட்டலங்கள்
07-07-94 முதல்
ரூபா 27.50 மட்டுமே.
இறைச்சி / மீன் / மரக்கறி

எதுவானாலும்
பகல் 11.45 முதல் பிற்பகல் 3.45 வரை
எமது இனிய வாடிக்கையாளருக்கு ஓர் மின்னல் அதிரடி

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

உணவுத் தயாரிப்பில் அபார சாதனை
ஜெசித்தாரா
எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.
(சி-9776)


**2-ம் லெப். பூபாலினி** (பரமேஸ்வரி நாகரத்தினம்- 8-ம் படிவம், யோகபுரம் - மல்லாவி)

**2-ம் லெப். டொனால்ட்** (இராமசாமி புவனகுமார் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)

**ஜெகன்** (நடராசா தவராசா - பரந்தன் - கிளிநொச்சி)

**சீராளன்** (சண்முகம் உதயகுமார் - 95, கனகபுரம் - கிளிநொச்சி)

**றோய்** (சோமசுந்தரம் திருநீலசங்கர் - 154-ம்கட்டை இரணைமடு - கிளிநொச்சி)

**கிறோ** (திருநாவுக்கரசு குசலவன் - இராமநாதபுரம், வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**கப்டன் தமயந்தி** (கமலலோஜினி வைத்தியநாதர் ஆத்திமோட்டை-மன்னார்)

**லெப். பரன்** (தியாகராஜா மோகன்ராஜா - 09, பெரியமடு - மன்னார்)

**கண்மணி** (சரோசினி முருகையா - சின்னக்கடை- மன்னார்)

**பார்த்திபன்** (டொமினிக் கனியூட் - 5-ம் வட்டாரம் பேசாலை - மன்னார்)

**மாலா** (றோஸ் மங்களிக்கா யாக்கோப்சில்வா - பூக்குளம், முள்ளிக்குளம் - புத்தளம்)

**மேஜர் கேசரி** (பாலகிருஷ்ணன் அரசகேசரி - கம்பசிட்டி, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

**மேஜர் சுரேஷ்** (கணேஸ் புலேந்திரன் - தாளையடி, வடமராட்சி கிழக்கு - யாழ்)

**கப்டன் டக்ளஸ்** (விக்கினேஸ்வரராஜா சதீஸ்கரன், மானிப்பாய் - யாழ்)

**கப்டன் ஜஸ்ரின்** (கிருஷ்ணபிள்ளை சுதாகர் - அல்வாய் மேற்கு - பருத்தித்துறை)

**லெப். வினோஜா** (விஜிதா சுவாம்பிள்ளை - 21, 1-ம் குறுக்குத் தெரு, பாசையூர் - யாழ்)

**லெப். லோகி** (வேலாயுதம் சிவகுமார் - 1-ம்கட்டை புலோலி, பருத்தித்துறை - யாழ்)

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10-வது சம்பளத் திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11-வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற் குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்சழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர் தரம்) இல் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

சம்பளத் திட்டம்:-

1405 -- 2470
60இன்4 — 75இன்11

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

**02. கணக்காளர் பதவி 104/10**

தகைமைகள்:.

(அ) கூட்டுறவு ஊழியர் 11-வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் அல்லது கணக்கு வைத்தல் அல்லது கணக்காய்வாளர் வேலையில் (3) மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 12-வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் புத்தகம் பேணுதல், கணக்கு ஆய்வாளர் வேலையில் (ஆறு) 6 வருட அனுபவம்.

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், பரீட்சை இறுதித் தேர்வு சித்தி அடைந்து ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்காய்வாளர் சேவையில் மேற்பார்வை மட்டத்திலான (2) இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், இடைநிலைத் தேர்வில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

(இ) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க. பொ. த. (உயர் தரம்) சான்றிதழ் பரீட்சையில் கணக்கியல் பாடம் உட்பட மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

சம்பளத் திட்டம்:-

1305 — 2005
40இன் 5 — 50இன் 10

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

பொது வயதெல்லை:- 25 - 45 வரை கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது. சங்கப் பணியாளர்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்க நிர்வாகத்தினூடாக அனுப்பப்படல் வேண்டும்.

பிணைகள்:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணத்திற்கமைய செலுத்தப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 28-07-94 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தலைவர், காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல. 374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
காரைநகர் பல நோ. கூ. சங்கம்.

(சி-9906)

---

லங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய, துணைப்படை வீரரான-

**சிவராசா** (சிவசம்பு சிவராசா - பட்டிக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

இவருடன் வந்து கொண்டிருந்தபோது இதேசம்பவத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்ட மாமடுவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய -

**கமல்** ( — — முல்லைத்தீவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக ஆகாய, கடல், வெளி நடவடிக்கையின்போது உப்பள அலுவலக பிரதான முகாம் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் நடா** (தங்கராசா பாஸ்கரன் - சித்திவிநாயகர் எதிர்வீதி, தம்பிலுவில் - அம்பாறை)

**இருதயராஜ்** (லோறன்ஸ் ஜோர்ஜ் - சொறிக்கல் முனை கல்முனை - அம்பாறை)

**அனோஜா-அனுசா** (சிறிகலா யோகநாதன் - இராசபுரம், கரடியனாறு - மட்டு)

**அன்பவன்-அன்பழகன்** (சுந்தரலிங்கம் ஜெயகாந்தன் - தபாற்கந்தோர் வீதி, கிரான்- மட்டு)

**குலசிங்கம்** (இராசசிங்கம் றேமன் - 2-ம் வட்டாரம், கண்டலடி, வாகரை - மட்டு)

**திலகன்** (அருணாசலம் சிவநாதன் - 14-ம் குடியிருப்பு, மண்டூர் - மட்டு)

**லெப். பிரசாந்த்** (கந்தசாமி மனோகரன் - முட்டுச்சேனை, மூதூர் - திருமலை)

**மெறடோனா-நிரோனா** (கைலாசபிள்ளை சந்திரகுமார் -ஆலங்கேணி, கிண்ணியா-திருமலை)

**அப்பன்** (யோன் லெஸ்ரர் - விகாரை வீதி, புதுக்குடியிருப்பு, தம்பலகமம் - திருமலை)

**நேதாஜி** (விஜயகுமாரி சிவஞானம் - ஓடைவெளி, நெடுங்கேணி - மணலாறு)

**யுகந்தன்** (நடராஜா பத்மநாதன் - 16-ம் கட்டை, கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**லெப். காசி** (மரியான் ஞானம் நெகிலங்குளம், மாங்குளம்- முல்லைத்தீவு)

**மீனாட்சி** (கலைச்செல்வி இராஜரட்ணம் - 1-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**மருது** (இராமசாமி மருதலிங்கம் - 18 முத்தையன் கட்டு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**நாகராசா** (முத்துராசா நாகராசா - கண்டிவீதி, மாங்குளம் - முல்லைத்தீவு)

**கணேஸ்** (இராசதுரை ஜெயரத்தினம் - புளியங்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**2-ம் லெப். மஞ்சுதன்** (சிவமாலை குகநேசன் - புளியங்குளம், ஓமந்தை - வவுனியா)

**லெப். லோகி** (வேலாயுதம் சிவகுமார் - 1-ம்கட்டை புலோலி, பருத்தித்துறை - யாழ்)

**லெப்.டில்லிகாந்த்** (மயில்வாகனம் சந்திரகுமார் - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

**லெப். கஜன்** (சின்னையா சீவரத்தினம் - அளவெட்டி வடக்கு - யாழ்)

**2-ம் லெப். கவி** (ராஜி சீவரத்தினம் - ஆதியாமலை உடுப்பிட்டி - யாழ்)

**2-ம் லெப். நார்த்திபன்** (அழகராசா புஸ்பராசா - சுப்பர்மடம் - பருத்தித்துறை)

**2-ம் லெப். அகிலன்** (கதிர்காமு பாலச்சந்திரன் - போக்கறுப்பு - முள்ளியான்)

**2-ம் லெப். மதிவாணன்** (ஐயாத்துரை சபேசன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி - யாழ்)

**2-ம் லெப். தனேந்திரன் / அக்பர்** (துரைசிங்கம் சிறீகரன் - கல்லறைவத்தை, இளவாலை-யாழ்)

**தவமலர்** (மஞ்சுளாதேவி ஈஸ்வரபாதம் - மருதங்கேணி வடக்கு, தாளையடி - யாழ்)

**நிசா** (விஜயகுமாரி சின்னத்தம்பி - புலோலி தெற்கு - பருத்தித்துறை)

**அமுதப்பிரியா** (அகிலகுமாரி பரமலிங்கம் - 4-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்)

**குயின்சி** (தயாநிதி தர்மராசா - அராலி தெற்கு வட்டுக்கோட்டை - யாழ்)

**மன்சூர்** (கதிரிப்பிள்ளை செல்வகுமார் - நாகர் கோவில் வடக்கு - யாழ்)

**வரதன்-வராகன்** (சின்னத்துரை சர்வகுமார் - கொற்றாவளை, அளவெட்டி வடக்கு - யாழ்)

**சசி** (சுப்பிரமணியம் குமரன் - பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு - பருத்தித்துறை)

**சிவநாதன்** (செல்லத்துரை ஜெயராஜ் - 70, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு - யாழ்)

**அருச்சுனா** (சுப்பிரமணியம் சுரேஸ்குமார் -மீசாலை வடக்கு, கொடிகாமம் - யாழ்)

**அங்குதன்-அங்கதன்** (கந்தன் நடராசா ராஜ்குமார் - 4-ம் கட்டை, இணுவில் - யாழ்)

**சுரேஸ்** (சுப்பிரமணியம் மணிவண்ணன் - 10/3, ஓட்டுமடம் வீதி, யாழ்)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9904)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# என்னைக் கொல்வதனால் வெற்றியைத்தடுக்கமுடியாது

## சந்திரிகா குமாரணதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்குஏற்படும்தோல்வியை முறியடிக்கும் நோக்குடனும் எதிர்கால ஆட்சியை பலவீனப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடனும் தன்னை கொலை செய்ய ஐ. தே. க. திட்டமிட்டுள்ளதாக சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

'ராவய' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் முன்னர் மனிதர்களை கொலை செய்த அரசாங்கம்தற்போது கொள்கைகளையும் கொலை செய்ய எத்தனிக்கின்றது. மக்கள் இன்று வேறு பாதை ஒன்றை விரும்புகின்றார்கள் எனவே இவர்களின் விருப்பு வெறுப்புக்களை கொலைகளினால் தடுக்க முடியாது எனவே எமது வெற்றியையும் தடுக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

## வன்முறைகள் வேண்டாம் சந்திரிகா வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு பொறுமையைக் காத்து ஓர் அமைதியான தேர்தலுக்கு வழிவிடுமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹ மாவட்ட தலைமை வேட்பாளர் சந்திரிகா குமாரணதுங்கா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நாட்டின் நன்மையைக்கருதி தான் இவ் வேண்டுகோளை விடுவதாகவும் சில கட்சிகள் வன்முறைக்கு தூபமிடுவதாகவும் இதற்கு இடம் கொடுக்கவேண்டாம் என்றும் தமது ஆதரவாளர்களிடம் தான் மிகவும் தாழ்மையுடன் இவ் வேண்டுகோளை விடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

### உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த உற்சவம் நாளை 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு கொடியேற்றமும், பின்னர் செபமாலையுடன் திருப்பலி ஆரம்பமாகும். (24)

# அவசரகாலசட்டம் காலாவதியாக ஜனாதிபதி விஜேதுங்க அனுமதி

## ஜூலை 15 இற்கு பின் அமுலில் இராது.

(கொழும்பு)

எதிர்வரும் 15-ம் திகதியுடன் அவசரகாலச்சட்டம் காலாவதியாக ஜனாதிபதி விஜேதுங்கா அனுமதிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவசரகாலச்சட்டத்தை எதிர்வரும் பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்கள் வரை நீடிக்குமாறு பிரதமர் ரணிலின் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

தேர்தல் காலத்தில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதை தாம் விரும்பவில்லை என ஜனாதிபதி அமைச்சர்களுடனான தனது சந்திப்பு ஒன்றின் போது குறிப்பிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவசரகாலச்சட்டம் அமுலில் இல்லாத காலங்களில் வடக்கு - கிழக்கு பிரச்சினை உட்பட எவ்விடயத்திலும் பிரச்சினைகள் தோன்றின் அவை வழமையான நிர்வாக நடவடிக்கைகள் மூலம் கையாளப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## வெற்றிக்கு உதவுமாறு கூரேயிடம் டி.பி.கோரிக்கை

(கொழும்பு)

தோல்வியில் இருந்துஐக்கிய தேசியக் கட்சியை மீட்டுத்தருமாறு ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா அமைச்சர் சிறிசேன கூரேயிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம் மாதம் 5-ம் திகதி ஜனாதிபதி மாளிகைக்கு சிறிசேன கூரேயை அழைத்து இவ் வேண்டுகோளை விடுத்ததாகவும் தேர்தல் வேளைகளில் கூடிய கவனம் செலுத்துமாறும் மற்றும் கட்சியை புனர் நிர்மாணம் செய்து வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லுமாறு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

## ஜஸ்டீன் கலப்பதி பொ.ஐ.ஐ.மு.யில் இணைவு

### கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் கோவில் பின் வீதியில் பெண்கள் அணியும் கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''திரைப்படங்களின் சமூகப்பாதிப்பு'' எனும்தலைப்பிலான அறிவியல் கருத்தரங்கு இன்று மாலை 4 மணிக்கு இணுவில் அறிவியற்கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரால் நடாத்தப்படும் இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி விரிவுரை நிகழ்த்துவார்.

### ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

உபாலிபத்திரிகைநிறுவனத் தலைவர் சீவலிரத்வத்தஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டு அவருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா கடந்த வாரம் இவரை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

### கடற்றொழில் சங்கம்

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும் தீவக கடற்றொழிலாளர் ஒன்றியத்திற்குட்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அவர்களின் தேவைகருதியும், அவர்களின் மேம்பாட்டிற்காகவும் கிராம மட்டத்திலான கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை இம் மாத முடிவுக்குள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

### முதலுதவி பரீட்சை

அடிப்படை முதலுதவி எழுத்துப் பரீட்சை ஒன்றை இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ் கிளை இம்மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10. மணி தொடக்கம் செஞ்சிலுவைப் பிரிவுகளில், அவர்களால் ஒழுங்கு செய்துள்ள பிரிவு நிலையங்களில் நடைபெறும்.

அரச அதிகா...

# வேட்பாளர் நியமனத்தில் ஐ. தே. கவினுள் உட்பூசல்

## அடிக்கடி பட்டியல் மாற்றப்பட்டதாம்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பாக வேட்பாளர் நியமனம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கடுமையான உட்பூசல் மோதல்கள் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

பல பிரதேசங்களை மையப்படுத்தி பிரதிநிதிகள் தமது ஐ. தே. க. சார்பில் நியமனம் தேவை என வேண்டுகோள் விடுத்த போதும் அவர்கள் பட்டியலில் அடிக்கடி மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களின்பெயர்களைநிராகரித்து விட்டனர். இதனைத்தொடர்ந்து உட்பூசல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துகது.

வேட்பாளர் நியமனம் தொடர்பாக அமைக்கப்பட்ட கமிட்டி வேட்பாளர் பெயர்களை தாம் நினைத்தவாறு திடீர் திடீர் என மாற்றிக் கொண்டு வந்ததாகவும் காலி மாவட்டத்தில் வேட்பாளர் பட்டியலில் ஆரம்பத்தில் நந்திமித்த டிசொய்சா, ரஞ்சன் வின்சன், ஜயவர்தன ஆகியோர்களின் பெயர்கள் உள்ளடங்கி இருப்பதாகவும் ஆனால், இறுதி நேரத்தில் இவர்களின் பெயர்கள் விலக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது

இதே போன்று மாத்தறை மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எச். ஆர். பியசிறி ஜஸ்டின் கலப்பதி, மதுரபால எதிரிவீர ஆகிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுக்க கூடாது என றொனி டி மெல் வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து இவர்கள் பட்டியலில் இடம் பெறவில்லை.

ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜீ. எம். பிரேமச்சந்திர குருணாகலை மாவட்ட ஐ. தே. க. பட்டியலில் உள்ளடங்குவதை காமினி ஜயவிக்கிரம பெரேரா அணியினர் வன்மையாக எதிர்த்ததாகவும் இதனை தொடர்ந்து இவருக்கு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று கம்பஹா மாவட்டத்தில் சந்திரிகா குமாரணதுங்கா போட்டியிடுவதினால் ரணில் விக்கிரமசிங்கா, அனுரா பண்டாரநாயக்கா, ஒஸி அபேகுண சேகர ஆகியோர் அம் மாவட்டத்தில் போட்டியிட மாட்டோம் என தெரிவித்துள்ளனர். எனவே இம் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைக்கு ஜீ. எம். பிரேமச்சந்திரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச்சேர்ந்தபந்துல குணவர்தன ஐ.தே.க. சார்பில் போட்டியிட இருந்த போதும் சுதந்திரக் கட்சியில் இருந்து கட்சி மாறிய திலக் கருணாரட்ன எதிர்த்துள்ளார். இதனைத்தொடர்ந்து இம் முயற்சி முறியடிக்கப்பட்டது.

# கல்வி போன்று விளையாட்டு பாலகர்க்கும் அவசியம்

## பாலர் பாடசாலைப் போட்டியில் உரை

விளையாட்டானது மாணவர்கள் மத்தியிலே வெற்றியையும், தோல்வியையும் பகிர்ந்து வாழ்க்கை நெறியை மேம்படுத்த வழியமைக்கும் ஆரம்பக் கல் ஆகும். பாலர்களுக்கு கல்வி எப்படியோ அப்படியே விளையாட்டும் அவசியமானது. விளையாட்டால் உடல் வளர்ச்சியடைகின்றது. மாணவர்களிடையே ஒற்றுமை வலுப்பெறுகின்றது.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற சங்கானை ஞானவைரவர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிமேற்குப் பிரதேச மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. சந்திரராசா உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த போட்டிகளில் பங்குபற்றிய சிறுவர்கள் ஒவ்வொருவரும் இந்த நாட்டின் எதிர்கால சிற்பிகள் எமது தேசத்தின் சகல பொறுப்புக்களையும் ஏற்று வழி நடத்த வேண்டியவர்களும் இவர்களே. அதற்குரிய வழிமுறைகளை விளையாட்டில் இருந்தே இளமையில் கற்றுக் கொண்டால் நாம் மதிப்புக்குரியவர்களாக வாழ முடியும். இந்த பாலர் பாடசாலையின் ஆசிரியை நல்ல முறையில் மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியை அளித்துள்ளார். இங்கு நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகள் அனைத்தும் பாராட்டத்தக்கவகையில் அமைந்துள்ளன. இந்த நிகழ்வுகள் அனைத்தையும் குறுகிய காலத்திற்குள் திறம்பட நெறிப்படுத்திய ஆசிரியர், பெற்றார், மாணவர்கள், கிராமவாசிகள் அனைவருக்கும் தனது பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

சங்கானை மாலியவத்தை விளையாட்டு மைதானத்தில் பெற்றார், ஆசிரியர் சங்கத் தலைவர் செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வின் போது வலிமேற்கு பிரதேச சபை

# இனப்பிரச்சினை தீர்வாக சமஷ்டி ஒன்றே வழி

## காமினிபொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வே நாம் ஏற்பதாக முன்னாள் பிரதிசபாநாயகரும் தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சென்றுள்ளவருமான காமினி பொன்சேகா ஐலண்ட் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

சமஷ்டி என்பது புதியதொன்றல்ல எமது சிங்கள மன்னர்கள் காலத்தில் இது இருந்துள்ளது. அப்போது சமஷ்டி முறை இருந்தது என்றால்

நடைபெறும்.

பதாக முன்னாள் பிரதேசபா

# பொ.ஐ.ஐ.மு.யில் இணைவு

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்தில் ஐ தே. க. ஆகக் கூடிய விருப்பு வாக்குகளை பெற்று மாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஜஸ்டீன் கலப்பதி பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

இவர் இது தொடர்பாக சந்திரிகா குமாரண துங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

தேர்தல் செலவுக்கு

# ஜனசவிய பணத்தை செலவிடும் முயற்சி தோல்வி

(கொழும்பு)

''ஜனசவிய'' திட்டப் பணத்தை முழுமையாக தேர்தல் காலங்களில் செலவிடுவதற்கு அதன் தலைவர் கலாநிதி விக்கிரம வீரசூரிய எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

உலக வங்கி ''ஜனசவிய'' திட்டத்தை தேர்தல் பிரசாரமாக மேற்கொள்ள ஐ தே க. எடுத்த முயற்சியாக கருதி இதற்கு தடை விதித்துள்ளது.

# அரச வதைமுகாம்களில் இளைஞர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களின் போது கைது செய்யப்பட்ட பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தொடர்ந்து இரகசிய வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

ரன்முதுகல, முத்தையா வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி கடற்கரைக்கு அருகே அமைந்த மேற்படி வதை முகாம்களில் இவர்கள் வாடுவதாக தெரியவருகின்றது.

ரன்முதுகல. முத்தையா வீதியில் அமைந்துள்ள வதை முகாம்கள் நில மட்டத்தின் கீழ் அமைந்து இருப்பதாகவும் மிகவும் பிரமாண்டமான கட்டடங்கள் இதற்கு மேலாக அமைந்து இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

அரசு உறுதியற்ற நிலையில் இருப்பதினால் இது தற்போது வெளிவரத் தொடங்கிவிட்டதாகவும் எதிர்காலத்தில் இவர்கள் கொலை செய்யப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் இவர்களில் அனேகர் தற்போது கண்பார்வை இழந்த நிலையிலும் உடல் நலம் குன்றிய நிலையிலும் காணப்படுவதாகவும் கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்கள் மீது சிங்களவர்கள் பல காலமாகவே நிபந்தனைகள் இட்டுவருகின்றனர். அமெரிக்காவில் உள்ள சமஷ்டி அமைப்புமுறை மூலம் மக்கள் தமது பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயம் என்ற அடிப்படைகளின் கீழ் சுதந்திரமாக வாழ முடியும். அதேசமயம் இதற்கு பொறுப்பாக மத்திய அரசு இருக்கலாம் இதில் என்ன தவறு இருக்கிறது என அவர் கேட்டுள்ளார்.

முறை இருந்தது என்றால் இப்போது அது இருப்பதில் என்ன தவறு இருக்கின்றது. என்னைப் பொறுத்தவரையில் இதுஒன்றே அரசியல் தீர்வாக உள்ளது இது துப்பாக்கிகள் குண்டுகள் மூலம் கொண்டு வரப்பட முடியாதது போரினால் பெறுமதியானவர்கள் அழிகின்றனர் இதை நான் பலகாலமாகக்கூறிவருகிறேன் முட்டாள் நடிகன் தேவையில்லாததை கூறுகிறான் என சிலர் என்னை நினைத்திருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்

வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திரு க.திரவியம், சங்கானை உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. பொ. சண்முகானந்தசிவம், சங்கானை வட்டப் பொறுப்பாளர் திரு. ந. மதி, சங்கானை அரசினர் வைத்திய சாலை வைத்திய அதிகாரி திருமதி சிவானந்தராசா, ஆசிரியர் பொன். சாம்பசிவம் உட்பட மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (41)

# இனப்பிரச்சினைக்கு தீர்வை தமிழர் ஐ. தே. க. விடம் எதிர்பாரார்

## லண்டன் சட்டத்தரணி சிறீகரன்

(கொழும்பு)

என்னைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சி இனப் பிரச்சினை தீர்விற்கான எந்த யோசனையையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. 17 வருட இழுபறியின் பின்னரும் தமிழர்கள் ஐ.தே.கவிடமிருந்து உறுதியான தீர்வு வரும் என எதிர்பார்க்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன். இவ்வாறு லண்டனில் உள்ள ஸ்கொட் என்னும் இலங்கைத் தமிழர் அமைப்பின் தலைவரும் லண்டன் தமிழ் வழக்கறிஞர் கழக உதவித் தலைவருமான அரியரட்ணராஜா சிறீகரன் தெரிவித்துள்ளார்

சண்டே ஐலண்ட் இற்கு அவர் அளித்த பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்தரப்பான பொதுஜன ஐக்கிய முன்னணி குறித்து அவரிடம் கேட்கப்பட்ட போது, எதுவும் கூட இதுவரை உறுதியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை இது குறித்து தற்போது அம்முன்னணியைச் சேர்ந்த பேராசிரியர் ஜி எல். பீரிஸ் ஆராய்ந்து வருவதாக அறிகிறேன். புதிய அரசியல் யாப்பை மீளமைக்க அவர்கள் முயல்கின்றனர் என்றார்.

தேர்தலில் பங்குபற்ற முடியாது என விடுதலைப் புலிகள் அறிவித்தமை பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போது சிறிலங்கா அரசியலில் தாம் நம்பிக்கை இழந்து விட்டதாக அவர்கள் வெளிப்படையாக அறிவித்துள்ளனர். இதைவிட அவர்கள் குடாநாட்டினுள் பொலிஸ், வங்கி, நீதிமன்று என சொந்தமாக ஒரு நிர்வாகக் கட்டமைப்பையே உருவாக்கியுள்ளனர். கடந்த 17 வருடங்களில் பிரச்சினையை தீர்க்காத அரசு உள்ள நிலையில் எவரும் விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்குபற்றும் என்று எதிர்பார்க்க முடியாது என்றார்.

# விளையாட்டு விழா

(தொல்புரம்)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின பாலர் பாடசாலை வருடாந்த பாலர் விளையாட்டு விழா எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பிரதேச சபை தலைமைச் செயலக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிதென்மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில்நடைபெறவுள்ள மேற்படி விளையாட்டு விழாவில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் வட்டப் பொறுப்பாளர் கு. இளந்திரையன் உட்பட மற்றும்பலர் சிறப்பு விருந்தினர்களாகவும், கலந்து கொள்ளவுள்ளனர். (41)

# எம்மையும் நடிகர்கள் என நினைத்துவிட்டார் போலும்

## காமினி பொன்சேகாவிற்கு லூசியன் பதில்

(கொழும்பு)

முன்னாள் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கட்சி தாவியது தொடர்பாக அறிவிக்க கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அவருக்கும் பிரபல பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணநாயக்காவிற்கும் இடையில் கடும் வாக்குவாதம் வெடித்தது. மோசமான வார்த்தைப் பிரயோகங்களும் இடம் பெற்றது.

இது தொடர்பாக பின்னர் லூசியன் ராஜகருணநாயக்கா செய்தியாளர் மாநாடு ஒன்றில் நிலைமைகளை விளக்கினார்.

கேள்வி: உங்களுக்கும் காமினி பொன்சேகா வுக்கும் இடையே தகராறு ஏதும் உண்டா?

லூசியன்: இல்லை நான் அவரை அதிகம் சந்தித்தது கிடையாது.

கேள்வி: காமினி பொன்சேகா உலவும் வட்டாரங்களுக்கு நீங்கள் செல்வதுண்டா?

லூசியன்: நிச்சயமாக இல்லை நான் சினிமா நடிகர் அல்ல

கேள்வி: நிருபர்கள் மாநாட்டில் அவர் ஏன் உங்கள் மீது சீறிவிழுந்தார்?

பதில்: அவரின் அகங்காரமாக இருக்கலாம் அவர் நிருபர் மாநாட்டில் என்னை பொய்யன் என்றார். இது பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்படாத சொல் இவர் ஒரு பாராளுமன்ற சபாநாயகர் தாம் இயக்கும் சினிமாவில் ஒரு காட்சி என அச்செய்தியாளர் மாநாட்டை அவர் நினைத்திருக்க வேண்டும். நடிகர்கள் மற்றும் உதவியாளர்களை வெளியேற்றுவது போல் எம்மையும் வெளியேற்றலாம் என நினைத்தார் போலும் என லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவித்தார்.

# சூழல் பாதுகாப்பு கலந்துரையாடல்

(தொல்புரம்)

''சூழல் பாதுகாப்பு மாதம்'' கடைப்பிடிக்கப்பட்டு வருவதையிட்டும், மாவட்ட சூழல் பாதுகாப்பினை சிறந்ததொரு திட்டத்தை முன்வைத்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டும், இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது என மாவட்ட சூழல் பாதுகாப்புக் குழுவின் செயலர் தெரிவித்துள்ளார். (41)

## பணி நிலை வெற்றிடங்கள்

கொடிகாமம் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் தொடங்கவுள்ள வாணிப நிறுவனமொன்றிற்கு பின் வரும் பணிநிலைகளில் அமர்த்துவதற்கு பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

1. மருந்து விற்பனையாளர் (கொடிகாமம் ஆண்/பெண்)
2. கணக்குப் பதியுனர் (வல்வெட்டித்துறை -பெண்)
3. கணக்குப் பதியுனர் (கொடிகாமம் ஆண்/பெண்)

தகைமை: மேற்படி பணி நிலைகளில் பணிபுரிந்த முன் அனுபவம் வேண்டும்.

அகவை: 18--40

விண்ணப்ப முடிவு நாள் 31-07-94

விண்ணப்பம் அனுபப வேண்டிய முகவரி;

விளம்பர இல - 339
மே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்ப மேலுறையின், இடது பக்கத்தில் விளம்பர இலக்கத்தைக் குறிப்பிடுக.

(8793)

## பணி நிலை வெற்றிடங்களுக்கு பணியாளர் தேவை

பணி நிலை: மருந்துக் களஞ்சியக் காப்பாளர்
தகைமை: களஞ்சியக் காப்பாளராகப் பணிபுரிந்த அனுபவத்துடன் மருந்துப் பொருட்கள் பற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.
அகவை/பால்: ஆண்டு 25 க்கு குறையாத - ஆண்.
விண்ணப்ப முடிவு நாள்: 20 - 07 - 94

பணி நிலை: மருத்துவமனைப் பெண் சிற்றூழியர்
தகைமை: மருத்துவமனை / சிகிச்சை நிலையத்தில் பணிபுரிந்த முன்னனுபவம் விரும்பத் தக்கது.
அகவை: 25 – 40
விண்ணப்ப முடிவு நாள்: 15 - 07 - 94

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

வில்லியம் கபோ தனியார் மருத்துவமனை
17, கண்டி வீதி, சுண்டுக்குளி.

(8794)


# தேவையற்ற வாக்குறுதிகளை சிறுபான்மையினருக்கு வழங்காதீர்

## பிரதான கட்சிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தலின் பொருட்டு சிறுபான்மையினருக்கு தேவையற்ற வாக்குறுதிகளைகொடுக்க வேண்டாம் என பிரபல பௌத்த பிக்குகள் மற்றும் பௌத்த பிரமுகர்கள் இணைந்து அரச தரப்பிற்கும் எதிர்க் கட்சி தரப்பிற்கும் கடிதம் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களிலும் இவ்வாறு சிறுபான்மையினரின் வாக்குகளை பெறுவதற்காக எடுத்த நடவடிக்கைகள் சிங்கள மக்களை பாதித்திருந்தது என இப் பிக்குகளும் பிரமுகர்களும் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கும், சிறிமாவோ பண்டார நாயக்காவிற்கும் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இக் கடிதத்தில் பின்வரும் நடவடிக்கைகளையே அரசுகள் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான தீர்வு இலங்கையின் சுயாட்சியையும் ஒற்றையாட்சியையும் பாதிக்காது இருத்தல் வேண்டும்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்று எக்காரணம் கொண்டும் ஏற்கப்படக்கூடாது.

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக் கூடாது இனரீதியாகபிரிக்கப் படக்கூடாது

அனைத்து கொள்கை மற்றும் முக்கிய நடவடிக்கைகள் குறிப்பாக நிலம் தொடர்பான பொறுப்புக்களை மத்திய அரசே கொண்டிருக்க வேண்டும்.

9 பிரபல பௌத்த தேரர்களுடன் காமினி ஜெயசூரிய, டட்லி குணசேகரா போன்ற முக்கிய சிங்கள அமைப்புக்களின் 8 பௌத்த பிரமுகர்களும் இக்கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

## ஆங்கிலதின போட்டி

பருத்தித்துறை கல்விக் கோட்ட ஆங்கிலதினப் போட்டிகள் இன்று புதன்கிழமையும் மற்றும் வெள்ளிக்கிழமையும் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்கல்லூரியில் நடைபெறுமென கோட்டக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் தெரிவித்தார். (யோ)

# திருட்டுக்கு உடந்தையான தாய்க்கு சிறை, அபராதம்

## சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பு

(தென்மராட்சி)

தனது பிள்ளைகள் எடுத்து வந்த பெறுமதி மிக்க நகையினை பிறருடையது என தெரிந்தும் அதனை வைத்திருந்த தாயாருக்கு சாவகச்சேரி நீதிமன்று குற்றப்பணமும், சிறைத்தண்டனையும் தீர்ப்பாக வழங்கியது

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 11 வயது, 9 வயது நிரம்பிய இரு சகோதரிகள் கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவருடைய வீட்டில் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி ஒன்றைஎடுத்து இவ் வழக்கில் உடந்தையென குற்றம் சாட்டப்பட்ட தமது தாயாரிடம் ஒப்படைத்துள்ளனர். தாயார் தனது பொருள் இல்லை என தெரிந்தும் தனது பிள்ளைகள் எடுத்து வந்த பொருளை இலாபம் தேடும் நோக்கில் வைத்திருந்துள்ளார் என சாவகச்சேரி காவல் துறையினர் குறிப்பிட்ட மூவருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்தனர்.

மேற்குறிப்பிட்ட குற்றத்திற்கு குற்றவாளிகள் குற்றத்தினை ஒப்புக் கொண்டதன் பிரகாரம் இதனை ஆராய்ந்த நீதிமன்று இச் சிறுமிகள் இருவரும் குற்றத்தினை சிந்திக்காமல் செய்திருக்கலாம் என இருசிறுமிகளையும் விடுதலை செய்தது.

எனினும் மூன்றாம் எதிராளியான தாயார் இவ் இரு பிள்ளைகளின்நல்வாழ்வுக்குதடையாகவும் இரு பிள்ளைகளையும் நாளைய சமுதாயத்தில் நற்பிரஜைகளாக மாற வேண்டிய நேரத்தில் அவர்களை திருட்டு வழிக்கு இட்டுச் சென்றதால் நீதிமன்று குற்றப்பணமாக 4000ரூபாவும் 160 நாட்கள் சிறைத் தண்டனையும் என தீர்ப்பளித்தது. (86)

# புலிகளின் தாக்குதல் இலக்கை கண்டுபிடிக்க உதவினாராம்

## இராணுவ அதிகாரிக்கு சன்மானம்

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்கவிருந்த இலக்குகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக வான் ஒன்றும் லொறி ஒன்றும் பொலிசாரினால் தேடப்பட்டு வருவதாகவும் சண்டே லீடர் பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதைக்கண்டுபிடிக்கஉதவிய இராணுவ அதிகாரிக்கு வீடு ஒன்றும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு அதிகமான சொத்துகளும் சன்மானமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்காவைக் கொல்வதற்காகஜனாதிபதி மாளிகைப் பகுதியில் பிரதம தபாற்கந்தோர் அருகிலிருந்து ஜனாதிபதியின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி மாளிகையை விட்டு ஜனாதிபதி கார்பவனி புறப்படும்போது கிளைமோர் கண்ணிவெடி மூலம் அதைத் தாக்க திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதைவிட கொழும்பு பங்கு சந்தையையும் இலங்கைவங்கி கோபுரத்தையும் தகர்க்க திட்டமிடப்பட்டிருந்ததாகவும் மோட்டார் வாகன பதிவாளர் அலுவலகமும் தாக்கப்பட இருந்ததாகவும் அப்பத்திரிகை கூறுகிறது இதன் மூலம் தாக்குதல்களில் ஈடுபடும் வாகனங்களை அவ் வலுவலகம் அடையாளம் காண முடியாமல் செய்வதே திட்டம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரதான வீதிகளை நீலக்கொடிகள் ஆக்கிரமிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுதாக்கலின் போது வேட்பாளர்களும் பல ஆயிரக்கணக்கான ஆதரவாளரும் முண்டியடித்து கொண்டு மாவட்ட செயலகங்களில் காணப்பட்டனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்களுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்களுக்கும் பல ஆயிரக் கணக்கானவர்கள் செயலகங்களின் முன்னால் கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இதே வேளை சிறிலங்காவில் பிரதான வீதிகளிலும் முழு அளவிலான சிவப்பு.நீல வர்ண கொடிகளே காணப்படுவதாகவும் பச்சை நிற வர்ண கொடிகள் மிகவும் அரிதாகவே காணப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை கொழும்பு நகரைமட்டும் மையமாக கொண்டு பச்சை நிற கொடிகள் ஓரளவு காணக்கூடியதாக இருந்ததாகவும் தெரிய வருகின்றது.

# கூரே விலகினார்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கிக் கொண்ட அமைச்சர் சிறிசேன கூரே ஐ. தே. க. கொழும்பு மத்திய தொகுதியின் அமைப்பா


## மூன்றாண்டு நினைவாக...



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
09. 05. 1973

வீரச்சாவு
13. 07. 1991

2-ம் லெப். சுரேஸ்
(சுப்பிரமணியம் மணிவண்ணன்)

ஒட்டுமடத்தில் மலர்ந்த மணிவண்ணனே
ஆனையிறவில் மடிந்த சுரேஸே
போராளி என்ற பெயருடன் மாவீரனானாய்
எங்களை மீளாத் துயரில் ஆழ்த்தினாய்
உன் பிரிவால் நிதமும் வாடுகின்றோம்.

சுரேஸ் வீதி,
10/3A, ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

குடுப்பத்தினர்,
நண்பர்கள்.

(8753)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் ஜஸ்ரின்

**(கிருஷ்ணபிள்ளை சுதாகர்)**

பிறப்பு
22- 01-1973

வீரச்சாவு
13-07-1991

சுதாகரெனும் பேர் மறைந்து
சூரப்புலி ஜஸ்ரினாய்
இதயமதில் நீங்காது
இடம்பிடித்த இளம்புலியே!

இந்தியரின் படைகளினால்
எங்களினம பட்டதுயர்
உந்தனது உள்ளத்தை
ஓங்கி அறைந்ததுவோ?

கல்வியினை இடை நிறுத்தி
கன்னித்தமிழ் காக்கவென
வல்ல தமிழ்ப் புலிப்படையில்
வந்திணைந்த மறவன் நீ!

குடும்ப நலன் நோக்காமல்
குறுகிமனம் வளர்க்காமல்
நடுங்கித்தினம் சாகாமல்
நாடு காக்கப் புறப்பட்டாய்

பூமகளின் புதல்வனாய்
கலை வாணியின் கண்மணியாய்
நாமெல்லாம் பெருமை கொள்ள
நடந்து வந்தாய் வரிப்புலியாய்

வெஞ்சமரில் பல தடவை
வீரத்தைக் காட்டினின்று
அஞ்சாமைக் கோர் வடிவாய்
அணிவகுத்து நின்றவனே!

ஆனையிறவுப் போரினிலே
அந்நியரைப் பலியெடுத்து
தானைத் தலைவனுக்கு
தனிப்புகழைச் சேர்த்தவனே!

கப்டன் ஜஸ்ரினாய்
களம்பல நீ கண்டதனால்
இஷ்டமுடன் உன் பெயரை
இயம்புகின்றோம் எப்பொழுதும்!

**கொற்றை... குடும்பத்தினர்**
கரும்புலிகள் எழுச்சி குடியிருப்பு
அல்வாய் மேற்கு.

(8792)

திய தொகுதியின் அமைப்பாளர் பதவியிலும் இருந்து விலகிக் கொண்டுள்ளார் என தெரியவருகின்றது.

### யாழ். பல்கலை வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்ட நிகழ்வு அண்மையில் யாழ். பல்கலைக்கழக கூடைப் பந்தாட்ட மைதானத்தில் 'மின்னொளியில்' நடத்தப்பட்டது.

இவ் அட்டத்தில் பற்றீசியன் அணியினை எதிர்த்து விளையாடிய யாழ் பல்கலைக் கழக அணி வீரர்கள் சிறப்பாக விளையாடி வெற்றிக்கிண்ணத்தைத்தமதாக்கிக் கொண்டனர்-

### பரிசளிப்பு

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து மன்றத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று 13 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 00 மணிக்கு சரசாலை-நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

(24)

### கண்காட்சி

தெல்லிப்பழை தொலைக் கல்வி நிலைய பயிற்சி ஆசிரியர்களின் ஆரம்ப கல்வி பிரிவு கண்காட்சியும் கலைவிழாவும் நாளை வியாழன் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.

### கும்பாபிஷேகம்

(குருநகர்)

வண்-வடமேற்கு நாவலடி வீதி அருள்மிகு பேச்சியம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

(21)

ஆரவாரம் செய்தனர்.

வருகின்றது.

முன்னாள் அதிபருக்கு

## முதலாம் ஆண்டு அஞ்சலி



## அமரர் திரு. க. சிவபாதசுந்தரம்

(முன்னாள் அதிபர் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி)

**மலர்வாய்: 26-12-1934 உதிர்வாய்: 14-07-1993**

கல்விக் கருங்கலமாய் திகழ்ந்தவரே
கல்லூரிக்காய் உழைத்த பெருந்திருவே
விலங்கியல் துறையின் முடிமணியே
விஞ்ஞானத் துறைக்கோர் ஒளிவிளக்கே.
சிந்தையில் தமிழ் விளங்க சான்ற செம்மலே
நம்மவர் முந்துற வழி சமைத்த அதிபரே
கல்விக் கடலோடு இரண்டறக் கலந்ததனால்
கல்லூரி உள்ளளவும் உம் நினைவு நிலைத்திருக்கும்.

**அதிபர், ஆசிரிய, மாணவ, ஊழியர்கள்.**

விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

(5892)



## வீரவேங்கை தனேந்திரன் (அக்பர்)

**(துரைசிங்கம் ஸ்ரீகரன்)**

மாரிசன்கூடல், இளவாலை.

(ஆனையிறவு உப்பள விடுதி முகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.)

பிறப்பு:
03 - 12 - 1975

வீரச்சாவு:
13 - 07 - 1991

ஆண்டுகள் மூன்றானதே அன்பு மகன்
தனேந்திரனின்நினைவுகளை, என்றும் நாம் சுமந்து
செருக்களத்தில் வீழ்ந்தாலும் - கண்மணியே
சரித்திரத்தில் நீ என்றும் வாழ்ந்திடுவாய்.

**-- தாய், சகோதரர்கள்**

''மலர் மகால்'',
மடத்தடிலேன், மானிப்பாய்.

(சி 9783)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

அவமதிப்பிற்கு ஆளாக தன்னை அனுமதிப்பவன் அவமதிப்பிற்கு அருகதையுடையவன்.

- பியேர் கொர்னேய்ல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 13-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## முகத்தில் பூசிய கரி

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான பிரேமதாசாவின் மனைவியும், நாட்டின் முன்னாள் முதற் பெண்மணியுமான ஹேமா பிரேமதாசா நேற்றுமுன்தினம் ஐக்கியதேசியக்கட்சியினாலேயே பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்திற்கு வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யவந்த ஹேமா பிரேமதாசாவிற்கு வேட்பாளர் பட்டியலில் பெயர் இல்லை என்பது பெருத்த அவமானம் என்பது எதுவித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டது. ஹேமா பிரேமதாசா தேர்தலில் போட்டியிடுவது சரியா? அவருக்கு ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுக்கப்பட வேண்டுமா? என்பவை ஒருபுறம் இருக்க அவர் திட்டமிட்டு அவமானப்படுத்தப்பட்டார் என்பதில் தவறில்லை.

ஏனெனில், வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்தவர்கள் இறுதி நேரம்வரை அதனை இரகசியமாகவே வைத்திருந்தனர். அவர்கள், ஹேமா பிரேமதாசாவை அவமானப்படுத்தும் நோக்கம் கொண்டவர்களாக இல்லாது விட்டால், இவ்விடயத்தை ஏற்கனவே அவரது கவனத்திற்குக் கொண்டுவந்திருக்க முடியும். இவ்வாறு கொண்டுவருவது சாத்தியமற்றது என்று கூறிவிடவும் முடியாது. ஏனெனில், ஹேமா பிரேமதாசா கொழும்பிற்கு வெளியில் போக்குவரத்து வசதிகள் அற்ற தூரத்திலோ, அன்றித் தொலைத்தொடர்பு வசதிகள் அற்ற இடத்திலோ வாழவில்லை.

இந்நிலையில், ஹேமா பிரேமதாசாவிற்கு திட்டமிட்டு தகவல் மறைக்கப்பட்டது என்பதே ஏற்புடையதாகும். ஆனால், இவ்வாறு ஹேமா பிரேமதாசா பழிவாங்கப்பட்டமைக்கான காரணங்கள் இன்னமும் சரியாக வெளிவரவில்லை. இதில் யாருக்கு பெரும்பங்கு என்பதும் இன்னமும் அறியமுடியவில்லை. ஆனால் திட்டவட்டமாக இது கட்சியின் உட்கட்சிப் பூசலின் விளைவு என்பது மட்டுமே நிச்சயம்.

இதில் பெரும்பங்கு, ஐக்கிய தேசியக் கட்சிக்கான லாபத்தில் பயனடையக் கூடியவர்களை விட தனிப்பட்ட ரீதியில் பயன்பெறக்கூடியவர்களினாலேயே வகித்திருக்க முடியும். இது கொழும்பில் பிரேமதாசாவின் அரசியற் தளத்திற்கு மாறாக கொழும்பில் அரசியற் தளம் தேட முற்படுபவர்களின் செயற்பாடாகவே இருக்க முடியும். இவர்களுக்கே ஹேமாவின் வருகை கசப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புண்டு. இதில், டி. பி.

# விவசாய இரசாயனங்களின் விபரம் விவசாயிகள் அறிந்திருத்தல் வேண்டும்

நமது நாடுஒரு விவசாயப் பூமி ஆகும். பலகோடி மக்கள் விவசாயத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டுள்ளனர். இவற்றைப் பல எதிர்ப்புக்கள் மத்தியில் மேற்கொள்கின்றனர். குறிப்பாக முதலீட்டுப் பணம், தூய விதைகள், தூய நீர், உரம், இரசாயன மருந்து, விவசாய உபகரணங்கள், சந்தைப் படுத்தல் போன்றன இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகும். இதில் பூச்சி, புழு, நோய்த் தாக்கத்தினால் உற்பத்தியில் பெரும் இழப்பு ஏற்படுகின்றது

பீடை நாசினிகள் போதியளவு சந்தையில் இருந்தும், அவற்றை தெரிவு செய்யும் விதம் பீடைகளின் நடமாட்டம், காலம், நேரம், பரவும் முறை, அவற்றைத் தடுக்கும் முறை போன்றவற்றை விவசாயி அறியாததனால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு பொருளாதார நட்டம் ஏற்படுகிறது.

பீடை நாசினிகளை அவை சட்டுப்படுத்தும் முறைகளைக் கொண்டு பிரிக்கலாம்.

### பூச்சிநாசினி (Insecticide)

இவை பூச்சி புழுக்களைக் கொல்லும் நாசினியாகும். இவை பூச்சிகளின் உடலுள் செல்லும் முறைகளைக் கொண்டு வயிற்று நஞ்சு/ தொடுகை நஞ்சு/ தூமமாக்கி என 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

வயிற்று நஞ்சு, கடித்துண்ணும் வாய் உறுப்புக்களைக் கொண்ட பூச்சி புழுக்களைக் கொல்வதற்கு சிறந்ததாகக் கருதப்பட்டாலும், குத்தியுறுஞ்சும். உறிஞ்சிக் குடிக்கும், ஒத்தும் வாயுறுப்பைக் கொண்ட பூச்சிகளும் பயன்படும்.

தொகுதி பூச்சி நாசினிகள் அல்லது ஊடுருவிப்பாயும் பூச்சி நாசினிகள் தாவரங்களில் கலங்களினூடாக உள்ளெடுக்கப்பட்டு முழுத் தாவரத்தொகுதிக்கும் நஞ்சைப் பரப்புகின்றன. இவற்றை உண்டு பூச்சி, புழுக்கள் மடிகின்றன.

தொடுகை நாசினி தூவப்பட்டு அல்லது விசிறப்பட்ட இடங்களில் பூச்சி, புழுக்கள்

படுத்தவோ, தடை செய்யவோ முடியாது. ஆனால் வைரஸ் காவிகளான பூச்சிகள், சிற்றுண்ணிகள், விலங்குப் புழு போன்றவற்றை இரசாயன மருந்து மூலம் கட்டுப்படுத்தலாம். இவற்றைத் தொகுதி பஞ்சசு நாசினிகள், நுண்ணுயிர் கொல்லிகள், சல்பர் சேர்வைகள், செப்பு சேர்வைகள், சேதன இரச பஞ்சசு நாசினிகள் எனப்பல வகையாகப் பிரிக்கலாம். தொகுதி பஞ்சசு நாசினி காழ்கலன்கள் மூலமாகக் கடத்தப்படுவதனால், மேல் நோக்கி ஓர் திசையிலேயேவளர் முனைக்கும், இலைகளுக்கும் கடத்தப்படும். உதாரணம்: பென்லேட், பிளாண் டாவிக்ஸ். நுண்ணுயிர்க் கொல்லிகள்- உதாரணம்:- கசுமின், அக்ரிமைசின் சல்பர் சேர்வைகள்:- உதாரணம்:- தியோவிட் மன்சற்றி; செப்பு சேர்வைகள்- உதாரணம்:- குப்றாவிட் பெரனொக்ஸ், சேதன இரச பஞ்சசு நாசினி- உதாரணம்:- செரசன்.

பஞ்சசு வித்திகள் அதிகளவு நைதரசன் உரப்பசளையிடும் தாவரங்களிலும், காய்ந்த மண்ணில் குளிர்மையான நீரைப்பாய்ச்சுவதாலும், பொசுபரஸ் பற்றாக்குறையினாலும், இரவு வெப்பநிலை 20 °சி இற்கும் குறைந்து காணப்படும் பொழுதும், உயர்ந்து ஈரப்பதன் உள்ள மந்தமான காலநிலையிலும், பனிக்காலத்திலும் விரைவாகப் பரவுகின்றன.

### பற்றீரியா நாசினி (Bacteriacide)

தாவரப் பகுதிகள் சடுதியாக வாடும்போது அவை பெரும்பாலும் பற்றீரியாக்களினால் தாக்கப்பட்டதாகக் கருதலாம். தாக்கப்பட்ட தாவரத்தை வெட்டி நீரினுள் வைத்தால் பற்றீரியா சாறு வடிவதை அவதானிக்கலாம். (0°ZC) நீரும் வெண்ணிறமாக மாறும். உதாரணம்: தூரிசைட் (THURICIDE) போன்ற பற்றீயாநாசினிகளை பற்றீரியாவிற்கு எதிராகப் பாவிக்கலாம்.

### விலங்குப் புழு நாசினி (Nemoticide)

இவை மிகவும் சிறியன. நுணுக்குக் காட்டியின் கீழ் பார்க்கலாம். இவை தாவிக

சிவப்புச்சிற்றுண்ணிகள்-உதாரணம்:- வெண்டி, கத்தரி, அவரையினம், மரமுந்திரிகை இலைகள் மண்ணிறமடைந்து கீழே விழும்போதும் அவதானிக்கலாம். இதில் சிலந்திகள் விவசாயிகளுக்கு நன்மை பயப்பனவாகும். சிற்றுண்ணி நாசினியாக உதாரணம்:- சல்பர் டைகோபோல் போன்றன பாவிக்கப்படுகின்றன.

### நத்தை நாசினி:- (Molluscicide)

இவை ஈரலிப்பு கூடிய பிரதேசங்களில் காணப்படுவதுடன் இரவு வேளையில் மிகத் தீவிரமாக வயல்களில் ஊர்ந்து தளிர்களை உண்ணும். இவற்றை அழிப்பதற்கு நத்தை நாசினியான மெற்றாவை (Moto) உபயோகிப்பர்.

### பறவை நாசினி:- (Avicide)

பறவைகள் வீட்டுத்தோட்டங்களில் முக்கிய பீடைகளாகத் திகழ்கின்றன- மண்ணைக் கிளறி விதைகளை உண்ணுதல், நாற்றுக்களின் இலைகளைக் கொத்தித் தின்னுதல், செடிகளில் காய்களையும், பழங்களையும் கொத்தித் தின்னுதல்: அறுவடைக் களங்களில் கதிர்களை, பொத்திகளை உண்ணுதல். உதாரணம்:- சிட்டுக்குருவி, சுவாண்வோ, காகங்கள், மைனா, நெல்குருவி.

காய்களில் உள்ள விதைகளை அகற்றி உண்ணுதல் அல்லது அவற்றை வெட்டி விழுத்துதல் உதாரணம்:- கிளிகள் போன்றன- இவற்றிற்கு அவை உண்ணும் உணவுடன் நஞ்சு வைத்துக் கொல்வர் நெல் வயல்களில் பியுரடான் கலந்து தானியங்களை வைத்து பல பறவைகளை கொல்வர்- எலிப்பாஷாணம் வைத்து வெளவாலைக் கொல்வர்-

### எலிப்பாஷாணம் (Rodenticide)

எலிகள் வயல்களில் இளம் கதிர்களை வெட்டி வீழ்த்துவதுடன் முற்றியகதிரைத் தமது இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்கின்றன. மேலும் நெல். அரிசி, தானியங்கள் சேமிக்கும் களஞ்சியங்களிலும், 5% ஐ திருடிச் செல்வதுடன் சேமிப்புப் பொருட்களில் எலிகள் சிறுநீரைக் கழிப்பதனால் உணவிற்கு அவை பயனற்றுப் போகின்றன. வீடுகளிலுள்ள உணவுப் பொருள்களைத் திருடுவதுடன், மனிதருக்குப் பிளேக் நோயையும் தோற்றுவிக்கின்றது. கால்நடைத் தீனிகளில் பெரும் பகுதியை இவை உண்பதினால் கால்நடை அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது. இவற்றைக் கொல்வதற்கு உடன் கொல்லிகளான றகுமின் குமாறின் வோபரின் போன்றஎலிப்பாஷணங்களைப் பாவிக்கலாம்.

மேற்குறிய வகையில் பலவகையான பீடை நாசினிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் இறுதிக் கட்டமாகப் பாவிப்பதற்கு உற்பத்தி செய்யப்பட்டு சந்தைகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இந்நாசினிகள் பீடைகளின் மேல் பாவிக்கப்படும்போது இவை உணவு மறுப்பு பூச்சிகள் உண்ண உணவின்றி இறக்கும்.

### தவிர்ந்தல் நாசினி:- (Repellant)

பூச்சிகள் தாவரங்களின் மேல் வராமல் தடுத்தல் அல்லது கலைத்தல்-

### இனப்பெருக்க நாசினி:- (Chemosterilant)

பூச்சியின் இனம் பெருக்காமல் குறைத்தல் அல்லது தடுத்தல்-

### பெரமோன்:- (Pheromone)

பூச்சிகளின் சில குறிப்பிட்ட நத்தைகளைத் தடை செய்தல் அல்லது துண்டித்தல்-

### ஊக்கும் நாசினி:- (Synergist)

பூச்சி நாசினியின் செயற்பாட்டுப் பொருளின் திறனை அதிகரிக்கச் செய்கின்றது. இப்படியான பீடை நாசினிகள் பீடைகளின் மேல் பெரும் விளைவுகளை ஏற்படுத்தி அவற்றைக் குறைக்க அல்லது சற்றுத் தாமதிக்க வைப்பதினால், விவசாயி தனது அறுவடையில் 40% உச்ச பயனை பீடைகளின் குடிப்பிலிருந்து பெறுகின்றான்- இதனால் பகுத்துணர்வான பீடை நாசினிப்பாவனை மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும்.

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்-

# வடயேமன் படைகள் ஏடனில் கொள்ளையடிப்பு

(ஏடன்)

வடயேமன் துருப்புக்களால் தென் யேமன் தலைநகர் ஏடன் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏடன்நகரில் வடயேமன் படையினர் பெருமளவிலான சூறையாடல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

போரின் பின்னர் தென்யேமன் வடயேமன் துருப்புக்களால் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

# நேபாள பாராளுமன்று கலைக்கப்பட்டது

ஏற்படுத்துவதற்கான வாய்ப்புண்டு. இதில், டி பி. விஜேதுங்காவின் பங்களிப்பு எத்தளவு? முழுப்பொறுப்பும் அவர்தானா. அல்லது அவர் பார்வையாளர் மட்டும் தானா என்பதும் எதிர்காலத்திலேயே தெரியவரும்.

ஹேமா பிரேமதாசாவின் அரசியற் பிரவேசம் பற்றி ஏற்கனவே பல வாதப்பிரதிவாதங்கள் இருந்தன. ஹேமா பிரேமதாசா அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த போதிலும், ஐ. தே. கவில் இருந்து அதற்குப் பெருவரவேற்புக் கிடைத்ததாகக் கூறிவிட முடியாது. ஓரளவு தட்டிக்கழிப்பு இடம் பெற்றே வந்தது.

இதே மயம், ஹேமா பிரேமதாசா தன்னையும், தனது குடும்பத்தையும் ஐ. தே. கட்சியில் பலர் எதிர்ப்பதைப் புரிந்து கொள்வதற்கு நிறையவே சந்தர்ப்பம் இருந்தன. அரசியலில் பிரவேசிக்க தனது கணவனின் இறுதிச் சடங்கின்போதே விருப்பத்தை வெளியிட்டிருந்ததும், இதுவரை அது கண்டு கொள்ளப்படவில்லை என்பதோடு மட்டுமல்ல, மகன் சஜீத் பிரேமதாசாவிற்கு வேட்பாளர் நியமனம் வழங்க ஐ. தே. க. தயாராக இருக்கவில்லை என்பதில் இருந்தே புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

கை ...ல் ஹேமா பிரேமதாசா இதைப் புரிந்து கொ...வில்லை என்று கூறினால் அதனை ஏற்றுக் கொள்வது கடினமே. ஏனெனில் ஹேமாவிற்கு கணிசமான அரசியல் அறிவும் ஈடுபாடும் உண்டு. அரசியலில் அபிலாசை கொண்ட ஹேமா பிரேமதாசா தனது எதிர்காலக் குறிக்கோளுக்காக கட்சிக்குள் உள்ள எதிர்ப்பு, புறக்கணிப்பு என்பனவற்றின் மத்தியிலும்தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கலாம். இம்முறை தேர்தலில் போட்டியிடாது விட்டால் தான் அரசியலில் மறைக்கப்பட்டுவிடலாம் என அவர் சிந்தித்திருக்கலாம். இதுவே வேறுவகையில் அவமானத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம்:

ஆனால், இது எவ்வாறு இருந்தாலும், இன்று ஐ. தே. கவிற்குள் உள்ள பிரேமதாசாவிற்கு எதிரான அணியினர் வெற்றி பெற்றுள்ளனர் என்றே கூறலாம். அவர்கள் சதியின் மூலம் வெற்றி பெற்றார்களா? திட்டமிட்டு ஓரங் காட்டினார்களா என்பதெல்லாம் ஒரு புறம் இருக்க, பிரேமதாசா அணியினர்/குடும்பத்தினர் ஐ. தே. கவிற்குள் ஓரம்கட்டப்பட்டுவிட்டனர். இது ஐ. தே. கவிலுள்ள பிரேமதாசா எதிரணியினருக்கு வெற்றியாக இருக்கலாம். ஆனால் ஐ. தே. கவிற்கு ஒட்டுமொத்தமாக பாதகமான விளைவையேஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

---

இடங்களில் பூச்சி, புழுக்கள் நடமாடும்போது அல்லது இவைகளை உறுஞ்சும் போது அதன் மெல்லிய நுணுக்கமான தோல்களினூடாக நஞ்சு உடம்பினுள் பரவி இறக்கின்றன.

தூபமாகிகளில் நஞ்சானது புகையுருவில் பூச்சிகளின் சுவாசத்தினை அல்லது சுவாச நொதிகளை தடை செய்கின்றது. சுவாச நஞ்சினால் இவை இறக்கின்றன. சில நஞ்சு நரம்புத் தொகுதியை தாக்கி பூச்சிகளுக்கு மரணத்தை உண்டாக்கின்றன சகல வாயுறுப்பைக் கொண்ட பூச்சிகளுக்கும், தூப நஞ்சு சிறந்ததாகும். இவற்றை மூடிய, பாதுகா பான அல்லது மண்ணிற்கு மட்டுமே பயன்படுத்தலாம்

## களை நாசினி (Weed cide)

இவை களைகளை அழிப்பதற்கும் பயன்படும் நாசினியகும். இவற்றின் தொகுதி களைநாசினி(எம் சி. பி. ஏ. மச்சிற்) தொடுகைகளை நாசினி (3-4 டி. பி. ஏ), சர்வ களை நாசினி (பரகுவாட்றவுண்டப்) தெரிந்தெடுத்த களை நாசினி என்றும், புல்லினம், கோரையினம், அகன்ற இலைகளைக் கொல்வதற்காகவும், பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இக் களை நாசினிகளை களைகளின் எப்பருவத்தில், எம்முறையில் பாவிக்க வேண்டும் என்பதை விவசாயி அறிந்திருப்பின் உச்சபயனை அடைய முடியும்,

## பஞ்சுசு நாசினி (Fungicide)

பஞ்கசினால் ஏற்பட்ட நோயினைத் தடுப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு உதவி புரியும் நாசினிகளை பஞ்சுசு நாசினி என்பர். வைரஸ் நோய்களை இதனால் கட்டுப்

---

பார்க்கலாம். இவை காவிகளாகவும் அழுகலுக்கு முன்னோடியாகவும், ஒட்டுண்ணியாகவும் தொழிற்படுகின்றன இவை வாழ்வதற்கு நீர் இன்றியமையாததாகும். உலகின் உணவு உற்பத்தியில் 5% இழப்பிற்கு இவையே காரணமாகும். இவை வேர்களை மட்டுமல்லாது நிலத்தின் மேல் உள்ள தாவரப்பகுதிகளையும் தாக்குகின்றன. இவை தாக்கப்பட்டவேரில் வேர் முடிச்சுகளும் வேர் கொப்புளங்களும் வேரில் இறந்த பகுதிகளை உருமாற்றி உருக்குலைத்து விடும் மிதமிஞ்சிய வேர்கள் கிளைவிடுதல், வேர் அழுகல், வேர் வளர்முனை சிதைவடைதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். மேற்பகுதியிலுள்ள தாவரப்பகுதிகளில் கொப்புளங்கள், இறந்த இழையங்கள் நிறமாற்றங்கள் புள்ளிகள், திரிபுகள் போன்றவை காணப்படும், விலங்கு நாசினியாக உதாரணம்:- பியூரடன், அலடிகார்ப் போன்றவற்றை பாவிக்கலாம்.

## சிற்றுண்ணி நாசினி (Acaricide or Ifiticide)

இவை இளமைப் பருவத்தில் மூன்றுசோடி கால்களையும், முதிர் பருவத்தில் நான்கு சோடிக் கால்களையும் குத்தியுறிஞ்சும் வாய் உறுப்பையும் கொண்ட சிற்றுண்ணிகள், உண்ணிகள், சிலந்திகள் ஆகும்.

கோடைப்பருவத்தில் இனப்பெருக்கம் அதிகரிக்கும். காற்றால் பரவும் சிற்றுண்ணிகள் பல நிறங்களைக் கொண்டுள்ளன. இளம்பச்சை சிற்றுண்ணி உதாரணம்; மிளகாய், உருளைக்கிழங்கு இலைகள் கீழ் நோக்கி சுருளுதலையும் (இலைச்சுருட்டி). இளஞ்சிவப்பு சிற்றுண்ணிகள் - உதாரணம்:- நெல் இலைகள் கருகத் தொடங்கும் போதும். கடுஞ்

---

தாக தெரிவிக்கப்படுகிறது.

கடைகளும், வீடுகளும் உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான பொருட்களை வடயேமன் படைகள் தமது வாகனங்களில் பகிரங்கமாக ஏற்றிச் செல்கின்றனர். இதனால் ஏடன் நகர மக்கள் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே வடயேமன் அமைச்சர்கள் சிலர் தென்யேமன் கொள்ளைகளை தடுத்து நிறுத்தி அமைதியை நிலை நாட்டும் பொருட்டு தென்யேமன் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மாதகாலப்

---

## புலிகளின் குரல்
## நிகழ்ச்சி நிரல்

### 1994 - 07 - 13
### புதன் இரவு

08. 01- குயிலோசை ''களத்தில் காத்தான்'' சிந்து நடைக்கூத்து 1-ம் அங்கம்
08 - 20 ஏர்முனை ''தூய விதை உற்பத்தி'' கேள்வி பதில்
08. 30- செய்திகள்
08. 40- நாடகம் ''இவர்கள் இப்படித்தான்''

### 1994 - 07 - 14
### வியாழன் காலை

07. 02- மாவீர வணக்கம்
07. 15- விடுதலைகீதங்கள்
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

---

(காத்தமண்டு)

நேபாள பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. நவம்பர் 13 இல் புதிய பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறும். இதற்கான உத்தரவை நேபாள மன்னர் பிரேந்திரா பிறப்பித்தார். தேர்தல் நடைபெறும் வரை பிரதமர் ஜி.பி. கொய்ராலாவே காபந்து பிரதமராக இருப்பார்.

கடந்த ஞாயிறன்று நேபாள பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பு ஒன்றில் கொய்ராலா அரசு தோல்வியடைந்ததையடுத்து பிரதமர் கொய்ராலா இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணுக்கு உயர் பதவி பாப்பரசர் வழங்கினார்

(வத்திக்கான்)

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் முதல் தடவையாக பெண் ஒருவரை திருச்சபையில் சிரேஷ்ட பதவி ஒன்றுக்கு நியமித்துள்ளார்.

கன்னியாஸ்திரியான சங்கைக்குரிய எமிலியா எஹர்லிச் குருமாரதும் கன்னியாஸ்திரிகளதும் வாழ்வு பற்றி ஒக்டோபர் மாதத்தில் இடம் பெறவுள்ள ஆயர்களின் ஒன்றியக் கூட்டத்தின் மூன்று விசேட செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்படவுள்ளார்.

அண்மையில் பெண்களுக்கு திருச்சபையிலும் உலகிலும் சமத்துவம் வழங்கப்பட வேண்டும் ஆனால் வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டும் எனக்கூறிய பாப்பரசர் அவர்கள் ஆண்களைப் போல் நடக்கமுயற்சிப்பதால் உண்மையான சுதந்திரத்தை அவர்கள் அடைந்துவிட முடியாது எனவும் கூறியுள்ளார்.

# பாக். தூதரக அதிகாரி உளவு பார்த்ததாக கைது

(டில்லி)

பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர் இந்தியாவில் வேவுபார்த்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு புதுடில்லியில் வைத்து கைதானார். இந்தியாவில் தம்முடன் தொடர்புள்ள நபர் ஒருவரிடமிருந்து அவர் மத்திய டில்லி அருகே பாதுகாப்புத்துறை ஆவணங்கள் சிலவற்றை பரிமாறிக் கொண்டிருந்தபோது டில்லி பொலிசாரால் கைதானார்.

இவருடன் இருந்த அந்த நபர் தப்பிவிட்டதாக கூறப்படுகிறது. பாகிஸ்தான் அதிகாரி பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் இவர் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## பொதுக்கூட்டம்

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ். கிளையின் விசேட பொதுக்கூட்டம் இன்றுபிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

விடுதலைப்புலிகள் தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு. இமையவன், யாழ் வட்டவை பொறுப்பாளர் திரு. செந்தமிழன் ஆகியோர் கலந்துகொள்வர்.

**யாழ் வணிகர் கழகம், நல்லூர் வணிகர் கழகம் விடுக்கும்**

## அறிவித்தல்

கடந்தமாதம் நடைபெற்ற யாழ் வணிகர் கழகம், நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட அனைத்து உணவகங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதன்படி ஒவ்வொரு புதன்கிழமையும் உள்ளூர் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை தயாரித்து விற்பனை செய்யுமாறு வேண்டுகின்றோம். இவ் உணவுகளுக்கு தேவையான உள்ளீடுகளை பின்வரும் வர்த்தக நிறுவனங்களில் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

உதயம் பல்பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

குலசி வாணிபர்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

யாழ் வணிகர் கழகம், நல்லூர் வணிகர் கழகம்.
(9908)

## முக்கிய அறிவித்தல்

**மொடேன் கல்வி நிலையம் நெல்லியடி பொறுப்பேற்கப்பட்டுள்ளது**

மேற்படி கல்வி நிறுவனம் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் ஒழுங்கு விதியினை மீறிய குற்றத்திற்காக விதிக்கப்பட்ட குற்றப் பணத்தைக் குறித்த தவணையில் கட்டத் தவறியுள்ளது இதனால் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் மேற்பார்வையில் தனியார் கல்விப் பிரிவு மேற்படி கல்வி நிறுவனத்தினைப் பொறுப்பேற்றுள்ளது.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(சி-9912)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
18-03-1964

உதிர்வு:-
14-07-1991

அமரர் குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி.



பிறப்பு :
08 - 12 - 1969

வீரச்சாவு :
13 - 07 - 1991

**2-ம் லெப்டினன்ட் கவி**
**(ஜீவரட்னம் - ராஜீ)**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு சடல் வெளி போரில் தனது உயிரையும் உடலையும் தமிழ் அன்னையின் விடுதலைக்காக அர்ப்பணித்த எமது அன்பு மகள் கவியை நினைவு கூரும்

**கண்ணீர் அஞ்சலிகள் !!!**

இப்படிக்கு,
அப்பா அம்மா,
சகோதரிகள்.

நாவலர் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(8800)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் டக்ளஸ்

# கனடாவில் அத்துமீறி குடியேறுவோரை கண்டுபிடிக்க புதிய நடவடிக்கை

[ஒட்டாவா]

கனடாவில் அத்து மீறிக் குடியேறுவோரை கண்டுபிடிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, வெளிநாட்டுக் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நாடு கடத்துவதற்கு விசேட பொலிஸ் செயலணி ஒன்றை கனடா அமைக்க விருப்பதாக, பிரஜாவுரிமை குடியேற்ற அமைச்சர் செர்சியோ மார்ச்சி அறிவித்துள்ளார்.

ருவாண்டா புருண்டி, ஆப்கானிஸ்தான், ஹெபிட்டி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களை நாடுகடத்த தடை செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார், ஆயினும் சீன அகதிகள் சீனாவுக்கு திருப்பி அனுப்பப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## செய்முறைத் தேர்வுகள்

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் செய்முறைத் தேர்வுகள் இன்று ஆரம்பமாகி இம்மாதம் 23ஆம் திகதி வரை நடைபெறும். இச் செய்முறைத் தேர்வில் தொழில் நுட்பப் பாடத்தில் வர்த்தகம் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு 13 14 ஆகிய திகதிகளிலும், அழகியலில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கு மட்டும் 15, 16, 18, 19, 20 ஆகிய திகதிகளிலும், விஞ்ஞான பாடத்துக்கு 22, 23 ஆகிய திகதிகளிலும் நடைபெறும்.

தேர்வு நாடிகள் நுழைவு அட்டையை தம்முடன் வைத்திருந்து இறுதி நாள் இடம்பெறும் விஞ்ஞான செய்முறைத் தேர்வில் பிரதம தேர்வாளரிடம் ஒப்படைக்கும் படியும், அத்துடன் பிரதம தேர்வாளர்கள் தங்களுக்குரிய வினாப்பத்திரங்களை தேர்வு நிலையங்களாகவுள்ள பாடசாலை அதிபர்களிடம் தங்கள் நியமனக் கடிதங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

### பதிவு

முழு விபரங்களுடன், சாதனங்களின் வலு அளவுகளையும் வரும் ஜூலை 15-ம் திகதிக்கு முன்னர், பருத்தித்துறை. அரசியல்துறை வட்டச் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### கடலில்

மாக செலவாகும். எனினும் கந்துல கப்பலின் இழப்பு தொடர்பாக கடற்படை அதிகாரிகள் எவரும் விசாரணைக்கோ அல்லது தண்டனைக்கோ உள்ளாக்கப்படவில்லை

சமுத்திராதேவி ரஷ்யாவிலிருந்து எழுபதுகளில் வாங்கப்பட்டதும், பி. 231 கொழும்பு டொக்யாட் நிறுவனத்தால் 1976 இல் கட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

### ஹேமா

ஹேமா பிரேமதாசாவின் பெயரை இணைத்தார். இதனை சிறிசேனகுரே, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோர் வன்மையாக எதிர்த்தனர்.

ஜனாதிபதி தயாரித்த இப் பட்டியலில் இருந்து ஹேமா பிரேமதாசா உபுல்ஜெயசூரிய ஆகியோரின் பெயர்களை நீக்கிய ரணில் விக்கிரமசிங்கா, சுனில் அபேவர்தன, ரட்ணசிறி ராஜபக்ச ஆகியோர் பெயர்களை நுழைத்தார் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை கொழும்பு மாநகர முன்னாள் மேயர் ரத்னசிறி ராஜபக்ஷாவிற்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், டி. எம். சங்கதாசாவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படக் கூடாது எனவும் திருமதி ஹேமா வலியுறுத்தி வந்தார்

இந்த நிலையிலேயே சங்கதாசாவிற்கு தேர்தல் வேட்பாளர் நியமனம் வழங்கப் படாவிடில் தாம் ஐ தே க விலிருந்து வெளியேற நேரிடும் என்று சிறிசேன கூரே எச்சரிக்கை விடுத்தார் இவ் விவகாரத்தில் தலையிட்ட ஐ தே க பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா சங்கதாசாவிற்கு வேட்பாளர் நியமனம் வழங்குவது எனவும், திருமதி ஹேமாவிற்கு தேசிய பட்டியலில் இடம் அளிப்பது எனவும் இணக்கம் கண்டார்.

எனினும் ஜனாதிபதி டி பி விஜேதுங்கா கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிடுவதற்கு திருமதி ஹேமாபிரேமதாசாவிற்கு வகை செய்வதாகக் கூறியதையடுத்து ஜனாதிமாளிகைக்குச் சென்று அங்கு தேர்தல் நியமனப்பத்திரத்திலும் திருமதி ஹேமா கையெழுத்திட்டிருந்தார்.

### கலந்துரையாடல்

களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

★

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்

### கட்சி

குட்படுத்தப்பட்டதாகவும், தற்போது அவர் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்கா, மற்றும் காமினி அத்துக் கோரளை ஆகியோரின் வாகனங்கள் இரத்தினபுரி நகரில் வைத்து, எதிர்த் தரப்பு ஆதரவாளர்களினால் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதாகவும், அச்சமயம் வாகனத்திலிருந்த அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா காயமடைந்தார் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேதமாக்கப்பட்ட இரு வாகனங்களும் பின்னர் தீயிட்டுக்கொளுத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது

### எப்பிலிபிட்டியாவில்

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான நந்தா மத்தியூ மற்றும் மாகாண சபை அமைச்சரான மகேஸ் தனசூரிய தலைமையில் உடவெலவபனியில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும்! இதன்போது பெறயல்ல சுதந்திரக் கட்சி காரியாலயம் முற்றாகத் தாக்கப்பட்டு, பொருட்கள் அனைத்தும் வெளியே வீசப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

இச்சம்பவம் நடைபெற்றபோது உடவெலவ பொலிஸார் பாராமுகமாக இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புத்தளத்தில்

புத்தளத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வில்டட் பெர்ணான்டோ, வென்னப்புவவில் இடம் பெற்ற வரவேற்பு நிகழ்வொன்றின்போது, அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவின் ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டதாக தெரிய வருகின்றது

இச்சம்பவத்தில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆதர

**அமரர் குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்**

(அரசறிவியல் விரிவுரையாளர்)

(பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்)

ஆண்டுகள் வரலாம்
உமது நினைவுகள்
எம்மில் ஆழமாய்
பதிந்து படரும்.

உமது ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுடன்
சமூக விஞ்ஞான மன்றம்
S. S. U.
பொருளியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி 9911)

---

**கப்டன் டக்ளஸ்**

**(செல்வன் சதீஸ்கரன்)**

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
(உயர்தர மாணவன்)

தாயின் மடியில் **12.1.1973** — தாயக மண்ணில் **13.7-1991**

தாயக மண்ணை மீட்டெடுக்கச் சென்ற வேங்கையே
சிரித்த முகமும் சிறந்த பேச்சுமுடைய செல்வமே
சதீஸ் என்று நாம் அழைக்க தாயகத்தில் நீயில்லை மகனே
புன்னகை பூத்த முகத்தை இனி எங்கே காண்போம்

இவருடன் 13-7-91ல் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் நினைவு கூருகிறோம். மெமோறியல் அதிபர், ஆசிரியர் ஆசிரியைகளையும், மாணவ மாணவிகளையும், சக போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் 13-7-94 (இன்று புதன்) மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தாய்: கிருஷ்ணராணி சித்தப்பா, யோகராசா அக்கா: பிறேமலதா அண்ணா: சுதாஸ்கரன் அண்ணி: தயாளினி அக்கா: யசோதலதா தங்கை: கேமலதா தம்பிமார்: ராஜ்கரன், ரமேஸ்கரன், பிரபாகரன், மாமா, மாமி, சித்தப்பா அன்ரிமார், சித்தி.

நல்லதம்பி ஹோட்டல்,
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய். (8799)

---

தால் 1976 இல் கட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**செப்டம்பர்**

நடைபெறும் போதே ஆகஸ்ட் 24 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டம்பர் 6ஆம் திகதி முடிவடையும். இரண்டாம் கட்டம் செப்டம்பர் 7ஆம் திகதி ஆரம்பமாகி 19ஆம் திகதி வரை தொடரும்.

**மணலாற்றில்**

புலிகள் நடாத்திய இத்திடீர்த் தாக்குதலின் போது பல படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும் மேலும் பலர் படுகாயமடைந்திருப்பதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஹேமா புறக்கணிப்பு**

களையும் அவரின் குடும்பத்தினரையும் ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டு ஒதுக்கி வந்துள்ளது எனவும் இது கட்சியை மேலும் மோசமான நிலைக்கு தள்ளும் எனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

---

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று இன்று பிற்பகல் 4 00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சகல தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**புலிகளின்**

நடத்துகின்றனர். தொடர்வேவு பார்ப்புக்கள் மூலம் படையினரின் நிலைகளை அவதானித்துக் கொள்கின்றனர் எனவும் அதில் அவர் குறிப்பிடுகிறார்.

மணலாறு முழுவதும் இராணுவத்தின் ஆறாம் பிரிகேட் படையினரே நிறுத்தப்பட்டுள்ளனர். இதன் அதிகாரியாகவும் மணலாறின் இணைப் பதிகாரியாகவும் பிரிகேடியர் சரத்முனசிங்கவிளங்குகிறார்.

---

இச்சம்பவத்தில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு பொலிஸார் உதவியதாகவும், காயமடைந்த பொது ஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களை மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதையும் பொலிஸார் தடுத்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**7 கோடி**

மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட நாட்டுடன் தொடர்பு கொண்டபோது அங்கிருந்து வந்த ஆயுத முகவரின் பிரதிநிதிகள் அவ்வாயுதங்கள் பாவனைக்கேற்றவை அல்ல என்பதை கண்டறிந்தனர். இறுதியில் அவ்வாயுதங்களை நான்கு கோடி இருபது இலட்சம் ரூபாவிற்கு திருப்பி பெற்றுக்கொள்ள இணங்கினர்.

இதனால் மீதியான 3 கோடி ரூபாவும் மேற்படி ஆயுத தரகில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு கமிஷனாக கிடைத்திருக்கலாம் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

---


**பெயர் மாற்றம்** — **இடமாற்றம்**

**ஜெயா பென்ஸி ஹவுஸ்**
160, நவீன சந்தை
**ரேகா பென்ஸி ஹவுஸ்**
25, 48, பெரியகடை

→ **ஜெயா அழகு மாடம்**
177A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு:-
மக்களின் வசதி கருதி மேற்படி இரு நிறுவனங்களும் ஒரே இடத்தில் இயங்குகின்றது.
[சி-7791]



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.